தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
**An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal**
*eISSN: 3049-0723 pISSN: 3107-7781*
*Vol. 4 Issue: 03 December 2025*
DOI: https://doi.org/10.63300/tm040312

# Philanthropist Who And Why?

**V. MANJU*,**
**Full Time Ph.D Research Scholar of Tamil, Reg.No: BDU2310632780329 Government College for women(A), Kumbakonam 612001. Affiliated to Bharathidasan University, Tiruchirappalli, TamilNadu, India.*
*E.Mail: manjuveerappan@gmail.com*
**Dr. G. JAYASREE**,**
***Research Guide, Associate Professor of Tamil, Government College for women(A), Kumbakonam 612001. Affiliated to Bharathidasan University, Tiruchirappalli, TamilNadu, India.*

***Corresponding Author** manjuveerappan@gmail.com

**ARTICLE INFO**
*Article history:*
Received
Dec. 04, 2025
Revised
Dec. 04, 2025
Accepted
Dec. 04, 2025
Published
Dec. 06, 2025

**ABSTRACT**

One who ruled a large territory was the vendhar. Those who ruled over a small territory were called small-territory kings. Thus, those who ruled over a small territory were magnanimous vallals. Tamil literature does not honour to the moverndhars as vallals. Vallals are these who have the ability to show compassion even to ordinary small creatures. The seven vallas who lived in the sangam, who are considered to be the vallas who are admired in literature are Paari, Oori, kaari, Nalli, Adhiyan, Began, and Aai. The territory ruled by these clans is mostly mountainous and forested with kurinji and Mullai. The small territory kings, the Kadaiyelu vallals, also leaders of independent ethinic group. Ethnic group life is a civilized way of life where everyone is equal and everything is common. Everyone shared the works and the benefits. Sharing is considered a key aspect of ethnic life. Ethnic groups were considered to be prosperous without land dominance. They were not aggressive. They were concerned about their own ethnic identity. They aimed to help those who sought refuge at any time.They were interested in living in harmony with the natural environment. They were thinkers with a deep and broad view of art and culture. The essence of the study is to explore and reveal the generosity, grace. And bravery of such vallals.

**Key words**: *Naladiyar, Naladi Nanuru, Pathinenkilkanakku, Jainism, Arathuppal, Impermanence, Tirukkural Comparison, Use of Similes, Padumanar, Velan Vedam*

## References:

1. Nachinarkiniyar Urai, Paththuppaatu,,Saaminathaiyar,V.Ve., (Notes), Dr. U.Ve. Saaminathaiyar Nool Nilayam, Chennai-2017.
2. Saaminathaiyar,V.Ve., (Urai), Puranaanooru Moolamum Pazhaiya Uraiyum, Dr. U.Ve. Saaminathaiyar Nool Nilayam, Chennai-2014.
3. Seyapal.R(Urai), Aganaanooru, New centurary Book House, Chennai-600 098, year 2007.
4. SundaraMoorthy Naayanaar, Devaaram,(7-thThirumurai) Jaganathan.K.V.(Notes), Thirupananthal sri kassi madathu veliyedu-1949.
5. Varatharajan.M , Tamizh ilakiya varalaaru, Sakithya academy veliyedu, New Delhi-1972.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**
This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.
Journal Homepage: https://tamilmanam.in/journal/
This is an open access article under the License Creative Commons Attribution 4.0 International License
http://Creativecommons.org//license/by/4.0/

# வள்ளல்கள் யார்?-ஏன்?

***வீ. மஞ்சு,** முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழ்த்துறை, பதிவுஎண்: BDU2310632780329, அரசினர் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), கும்பகோணம். 612001. பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது. திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.

****முனைவர் கோ. ஜெயஸ்ரீ,** இணைப்பேராசிரியர் மற்றும் நெறியாளர். அரசினர் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), கும்பகோணம். 612001. பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது. திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்:**

பெருநிலப்பரப்பை ஆட்சிசெய்தோர் வேந்தர் ஆவர். சிறுநிலப்பரப்பை ஆட்சி செய்தோர் குறுநில மன்னர், சீறூர் மன்னர் எனப்படுவர். அவ்வகையில் சிறுநிலப்பரப்பை ஆட்சி செய்தவர் பெருமனம் கொண்ட வள்ளல்களாகத் திகழ்ந்தனர். மூவேந்தர்களை வள்ளல்கள் என இலக்கியங்கள் கூறவில்லை. மனதளவில் பெருங்கருணை நிறைந்தவர்களாக, சாதாரண உயிரினங்கள் மீது கூட உயிரக்கம் காட்டக்கூடிய தன்மை உடையவர்களாக இருப்பவர்களே வள்ளல்கள். இலக்கியம் போற்றப்படும் வள்ளல்களாக விளங்குவோர் சங்க காலத்தில் வாழ்ந்த கடையெழு வள்ளல்களான பாரி,ஓரி,காரி,நள்ளி,அதியன்,பேகன்,ஆய் ஆவர். இவ்வள்ளல்களின் ஆட்சிப்பகுதி பெரும்பாலும் குறிஞ்சியும்,முல்லையும் சேர்ந்த மலை மற்றும் காட்டினை கொண்டதாக விளங்குகிறது. குறுநில மன்னர்களான கடையெழு வள்ளல்கள் தனித்தியங்கும் இனக்குழுவின் தலைவர்களாகவும் இருந்துள்ளனர். இனக்குழு வாழ்வானது தன்னலம் பேணாது பொதுநலம் பேணும் தன்மையை உடையது. அனைவரும் சமம் அனைத்தும் பொதுவானது என்ற பண்பட்ட வாழ்வு முறை இனக்குழு வாழ்வு ஆகும். உழைப்பும் அதனால் கிடைக்கும் பயனையும் அனைவருமே பகிர்ந்து கொண்டனர். இனக்குழு வாழ்வில் முக்கிய அம்சமாக கருதப்படுவது பகிர்ந்தளித்தல் என்ற தலையாயப் பண்பே ஆகும். இனக்குழுவினர் 'நில' ஆதிக்கமிலாது உயிர் வளம் கொண்டவராக விளங்கினர்; ஆக்கிரமிப்பு மனமில்லாதவர்கள் தன் இன வாழ்வு குறித்த சிந்தனை கொண்டவர்கள்; அடைக்கலமாக நாடி வந்தவர்க்கு எந்நாளும், நேரமும் துணை செய்வதை நோக்கமாக கொண்டவர்கள்; இயற்கைச் சூழல் சார்ந்த வாழ்வினை நாட்டமாகக் கொண்டவர்கள்; கலை, பண்பாடு பற்றிய ஆழ்ந்த பரந்த சிந்தனை கொண்ட சிந்தனையாளர்கள். அத்தகைய வள்ளல்களின் கொடைத்திறம், அருள்திறம், வீரம், ஆகியவற்றை ஆய்ந்து வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் சுருக்கம் ஆகும்.

**திறவுச்சொற்கள்:** வள்ளல், கருணை, கொடை, கொடைமடம், வேந்தர், வீரம்.

## 1.முன்னுரை:

" வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்." என்ற வள்ளலாரின் கூற்றினைப்போல வறியோரை கண்ட கணத்திலே சுரக்கும் அருள்திறமானது வள்ளல்தன்மை எனப்படும். அருட்கொடையில் சிறந்து விளங்குபவர்களே வள்ளல் எனப்படுவர். அத்தகைய கொடைப் பண்பில் சிறந்து விளங்கிய வள்ளல்கள் பற்றி கீழ் வருமாறு காண்போம்.

**1.1 வள்ளல்- பொருள்:**

வள்ளல் என்பதன் பொருள் வரையாது கொடுப்போன், ஈகையாளன், கொடையாளன் என பொருள் கொள்ளப்படும். உயிர்களின் வறிய நிலையைக் கண்டவுடன் அதற்கு தேவையானவற்றைக் கொடுத்து அத்துயரினை போக்குபவர் வள்ளல்கள் ஆவர்.

சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளல்களான பாரி, ஓரி, காரி, நள்ளி, அதியன், பேகன், ஆய் உள்ளிட்ட ஏழு வள்ளல்களின் கொடை,வீரம், அறம், பற்றிய செய்திகள் மிகுதியாக புறப்பாடல்கள் வழி கிடைக்கின்றன. அவற்றை பின்வருமாறு ஆராய்வோம்.

சங்க காலத்தில் கொடைப்பண்புடையோர் இருப்பினும் அவர்களுள்ளும் சிறந்தோர்களாக ஏழு வள்ளல்களை மட்டும் சிறுபாணாற்றுப்படை இயம்புகிறது. இந்நூலுக்கு உரைவகுத்துள்ள நச்சினார்க்கினியர் இவ்வள்ளல்களை கடையெழு வள்ளல்கள் எனக் குறிப்பிடுகிறார். இந்த'கடை' எனும் அடைமொழி எக்காரணம் குறித்து வழங்கியிருப்பார் என ஆராயப்புகின், இவ்வள்ளல்கள் குறித்த செய்யுள்கள் அடங்கிய நூல்கள் எட்டுத்தொகை நூல்களும், பத்துப்பாட்டு நூல்களுள் சிறுபாணாற்றுபடையும் ஆகும்[1]. இந்நூல்கள் தோன்றிய காலக்கட்டமாக இலக்கிய வரலாறு குறிப்பது மூன்றாம் சங்கமான கடைச்சங்கமே ஆகும். இதைக் கருத்திற்கொண்டே உரையாசிரியரும் கடையெழு வள்ளல் எனக்குறித்திருக்கலாம் என்பதை அறியமுடிகிறது.

**2. பேகன்:**

வள்ளல் எழுவரில் சிறுபாணாற்றுப்படை உரைக்கும் முதல் வள்ளல் பேகன் ஆவான். இவன் ஆவியர் குலத்தைச் சார்ந்த ஒரு குறுநில மன்னன் இவன் ஆட்சி செய்த மலை 'பொதினி' மலை ஆகும். தற்போது 'பொதினி' 'பழனி' என்று மரூவி அழைக்கப்படுகிறது. பேகன் சிறந்த கொடையாளி. புலவர்களுக்கும் யாழ் வாசிக்கும் பாணர்களுக்கும், விறலியர்களுக்கும் பரிசுகளை வாரி வழங்குவான். பேகன் சிறந்த கொடை வள்ளல் என்பதற்கு ஆதாரமான நிகழ்வினை சிறுபாணாற்றுப்படை நூல் பின்வருமாறு சுட்டுகிறது.

**" ---------அதா அன்று**
**வானம் வாய்ந்த வளமலைக் கவாஅற்**
**கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய**
**வருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்**
**பெருங்கல் நாடான் பேகனும்" (சிறுபாண். அடி:84-87)**

ஒரு நாள் பேகன் வெளியில் காலாற காற்றில் உலாவ சென்று திரும்பும்போது கான மயில் ஒன்று தன் தோகை விரித்து ஆடிக் கொண்டிருப்பதைக் கண்டான். அது கார்காலமானதால் குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. மயில் தன் தோகையை அசைத்தபோது உண்டான ஒலியால் அது குளிரால்தான் நடுங்குகிறது என்று இரக்க உணர்ச்சி தோன்ற பேகன் உடனே தான் போர்த்திருந்த விலையுயர்ந்த கல், மணிகள் பதிக்கப்பட்ட உயர்ந்த போர்வையை மயில் மீது போர்த்தினான்.

**" மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்**
**படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்**
**கடாஅ யானைக் கலிமான் பேக" (புறம்.145:1-7)**

இந்த கொடைத் தன்மையே அவனை சிறந்த வள்ளல் என பாராட்ட வைத்தது.

**2.1. கொடை மடம்:**

இன்னாருக்கு இன்னது கொடுக்க வேண்டும் என்பதை எண்ணிக் கொண்டிராமல் கிடைத்ததை நினைத்தபோதே கொடுப்பதைக் கொடை மடம் என்பர். மடம் என்பதற்கு 'அறியாமை' என்று பொருள். இது சரியா?, தவறா? என்று ஆராயும் அறிவுக்கு இடம் கொடுக்காமல், உள்ளத்தில் கொடுக்கத் தோன்றியபோதே கொடை மடம் உடையவர்கள் கொடுத்து விடுவார்கள். அத்தகைய கொடை மடம் உடையவன் பேகன். மயில் போர்வையை போர்த்திக் கொள்ளுமா என்று அவன் சிந்திக்கவில்லை மாறாக அது குளிரில் நடுங்குகிறது அதன் துயரினை போக்க வேண்டும் என்ற ஒரே நோக்கிற்காக மட்டுமே போர்வையை வழங்கியுள்ளான். அத்தகைய கொடைமடம் உடைய பேகன் படைமடம் படான் என்று அவனின் கொடைத்தன்மையையும், வீரத்தினையும் பரணர் புகழ்கிறார்.

**2.2. படைமடம்**

**" அறுகுளத்து உகுத்தும், அகல்வயல் பொழிந்தும்**

**--------------------------------**

**வரையா மரபின் மாரிபோல**
**கடாஅ யானைக் கழல் கால் பேகன்**
**கொடைமடம் படுதல் அல்லது**
**படைமடம் படான்------------------"** **(புறம்.142:1-6)**

வற்றிய குளத்திலும் , வயலிலும் பெய்யும் மழையானது பயன்படாத களர்நிலத்திலும் பொழியும். இங்கு பெய்யலாம், பெய்யக் கூடாது என பாகுபாடின்றி பொழியும் மழைபோல பேகனும் கொடைகொடுப்பான் அவ்வாறு கொடுப்பதனால் அவனை அறியாமை உடையோன் என எண்ணக் கூடாது. பிறர் படை கொண்ட போரிட்டால் அறநெறியில் இருந்து தவறாமல் மாற்றான் படைவலிமைக்கு எற்றவாறு போரிடுவான். படைமடம் உடையவன் அல்லன் என புலவர் அவனை சிறப்பித்துள்ளார்.

**3.பாரி:**

கொடைமடம் என்ற பண்பிற்கு உரிய வள்ளல் இருவருள் பேகன் மற்றொரு வள்ளல் பாரியே ஆவான். இருவரிடத்தும் உள்ள ஒற்றுமை கொடை கொடுத்த பொருளின் தன்மையே, பேகன் மயிலுக்கு கொடை கொடுத்தான். பாரி முல்லைக் கொடிக்கு கொடை கொடுத்தான். இருவருமே ஆறறிவுக்கு கீழுள்ள உயிர்களுக்கே இரக்கம் கொண்டு கொடை நல்கியுள்ளனர் என்பது பொருத்தம்.

**" கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங்கொடுப் பாரிலை"**[2] என்னும் புகழுக்குரியவன் பாரி. வேளிர் குடியை சார்ந்தவன் "வேள்பாரி" இவன் ஆட்சி செலுத்திய நாடு பறம்புநாடு இவனுடைய மலை பறம்பு மலை . இவனுடைய பறம்பு நாடு முந்நூறு குளிர்ந்த ஊர்களை கொண்டுள்ளதாய் **"முந்நூர் ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு"**[3] புறப்பாட்டில் கபிலர் சுட்டுகிறார்.

சுரபுன்னை மரங்கள் நிறைந்த பாதையில் பாரி தன் தேரில் மலைவளம் காணச்சென்று திரும்பும்போது, பாதையில் சிறிய முல்லை மலர்கள் பூத்துக் குலுங்கும் முல்லைக் கொடியொன்று பற்றி படர்வதற்கு கொம்பு இல்லாமல் காற்றில் அலைப்புறுதலைக் கண்டான். கண்டபொழுதில் அக்கொடி பற்றி படர்வதற்கு தன் பெரிய தேரினையே கொடியாக கொடுத்த விட்டான். இதனை,

**" -------------சுரும்பு புண**

**நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்**

**சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய**

**----------------------------**

**பறம்பின் கோமான் பாரியும்" (சிறுபாண்.அடி:87-91)**

சிறுபாணாற்றுப்படை பாரியின் வள்ளல் தன்மையை இயம்புகிறது.

மலரில் வேற்றுமை காணாது மணம் உள்ள மலரானாலும் மணம் இல்லாத மலரானாலும் ஒருவன் இறைவனுக்கு கொடுத்தாலும் அதனை வேண்டாம் என மறுக்கமாட்டார். அதனைப்போன்றே அறிவில்லாதவர்களும், கீழான குணங்களை உடையோரும் பாரியிடம் சென்றாலும் கொடை கொடுப்பதை தன் கடமையாக கொண்டு அவர்களுக்கு பொருள் வழங்குவான் என புறப்பாடல் பாரியின் கைவண்மையை கீழ்வருமாறு குறிப்பிடுகிறது.

**" நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்**

**புல்லிலை யெருக்க மாயினு முடையவை**

**------------------------------**

**கடவன் பாரி கைவண்மையே" (புறம்.106:1-5)**

**3.1. வாள்வண்மை:**

பாரியின் புகழ்மீது அழுக்காறு கொண்ட மூவேந்தர் பறம்பு மலையை சற்றி வளைத்தனர். அதனைக் கண்ட பாரியின் உற்ற நண்பரும் புலவருமான கபிலர் அவர்களிடத்து,

**" கடந்தடு தானை மூவிருங் கூடி**

**-------------------------**

**முந்நூறு றூரும் பரிசிலர் பெற்றனர்**

**யாமும் பாரியு முளமே**

**குன்று முண்டுநீர் பாடினிர் செலினே" (புறம்.110:1-6)**

நீங்கள் மூவரும் சேர்ந்து பறம்பு மலையை முற்றுகையிட்டாலும் பறம்பு நாட்டினை உங்களால் பெற இயலாது என்றும்; பறம்பு நாட்டில் உள்ள முந்நூறு குளிர்ந்த ஊர்களையும் பாரி பரிசிலர்க்கு கொடுத்து விட்டான் என்றும்; மீதம் இருப்பது பாரியும் தானும் குன்றும் என்றும்; அதனையும் தாங்கள் பாடினிராய் வரின் பாரி கேட்டதை கொடுப்பான் என்கிறார். பாரியிடத்து இசை,கலையால் வெல்ல முடியுமேயன்றி வாள் வலிமையால்அவனை வெல்ல இயலாது என்று அவனின் கலைத்தன்மையும், வீரத்தையும் போற்றுகிறார்.

பறம்புமலையை மூவேந்தர் முற்றியிருந்த காலத்து அதனை வெறுத்த பாரி வெளியே வந்து அவ்வேந்தர்களை துரத்த முடிவுசெய்து தன் வாள்வலிமையால் அவர்களை வென்று துரத்திய வீரச்செய்தியை பின்வரும் அகப்பாடலொன்று சுட்டுகிறது.

**" --------------வாள்அமர் உழக்கி,**

**ஏந்துகோட்டு யானை வேந்தர் ஓட்டிய**

**கடும்பரிப் புரவிக்கைவண் பாரி. (அகம்.78:20-22)**

**4.காரி:**

முள்ளூர் மலையை ஆட்சி செய்தவன் காரி. இவனுடைய குடி மலையர் குடி ஆதலால் மலையமான் என்றழைக்கப்பட்டான். ஒலிக்கும் மணியினையுடைய குதிரையோடு, தன் நாட்டினையும், அருள்நிறைந்த நன்மொழிகளையும் இரவலர்களுக்கு ஈந்தவன் காரி. இதனை,

**" ------கறங்கு மணி**
**வால் உளைப் புரவியொடு வையகம் மருள்**
**--------------**
**சூழல் தொடித் தடக்க காரியும்" (சிறுபாணா.அடி.91-95)**

சிறுபாணாற்றுப்படை சிறப்புடன் உரைக்கிறது. இவன் வீரத்தால் சிறந்தவன் என்பதால் மூவேந்தரும் தன் படைக்கு துணையாக கேட்டு அவனுக்கு பல பொருட்களை பரிசாக கொடுப்பர். அதனை பெற்று காரி தன்னை நாடி வரும் புலவர்களுக்கும், இரவலர்க்கும் கொடையாக அளித்துவிடுவான். இவனுடைய குதிரையின் பெயர் காரி அக்காரி என்னும் குதிரையில் அமர்ந்து பெரிய போர்களை வென்றவன், மழையை போன்ற ஈகையாளன் என்பதை,

**" காரியூர்ந்த பேரமர்க் கடந்த**
**மாரி யீகை மறப்போர் மலையனும் " (புறம்.158:6-7)**

புறப்பாடல் சுட்டுகிறது.

**4.1. கொடைச்சிறப்பு:**

இவன் தேர்களை புலவர்களுக்கு கொடையாக கொடுப்பதால் **"தேர்வண் மலையன்"** எனவும் அழைக்கப்படுகிறான். இவன் வழங்கும் தேர்களின் எண்ணிக்கையானது முள்ளூர் மலையின் உச்சியில் பெய்யும் மழைத் துளிகளை காட்டிலும் அதிகமாகும்.

**" -------தேரீ தல்லே**
**தொலையா நல்லிசை விளங்கு மலையன்**
**மகிழா தீத்த விழையணி நெழுந்தேர்**
**பயன்கெழு முள்ளூர் மீமிசைப்**
**பட்ட மாரி யுயறையினும் பலவே" (புறம்.123:1-6)**

இதன் மூலம் மலையமான் திருமுடிகாரியின் கொடைத்தன்மையை அறியலாம்.

**5.ஆய்:**

இவன் பொதிய மலையிடத்தே உள்ள ஆய்குடி என்னும் ஊரை தலைமையாக கொண்டு ஆட்சி செய்தவன். ஆய் அண்டிரன் எனவும் அழைக்கப்படுகிறான். இவன் சிவபக்தியை உடையவன். நாகம் அவனுக்கு பரிசாக அளித்த நாக மணிகளால் பதிக்க பெற்ற கலிங்கத்தை தான் அணிவது தகுதியற்றது என அந்த இறைவனுக்கே கொடையாக அக்கலிங்கத்தை அணிவித்தான் இதனை,

**" -----------நிழல் திகழ்**
**நீல நாகம் நல்கிய கலிங்கம்**
**ஆலமர் செல்வற் அமர்ந்தனன் கொடுத்த**
**ஆர்வ நன் மொழி ஆயும்" (சிறுபா.அடி.95-99)**

சிறுபாணாற்று அடிகள் உரைக்கின்றன. இவன் பரிசிலர்க்கு கொடையாக யானைகளை கொடுப்பான். இவனுடைய நாட்டில் யானைகள் நிறைந்து காணப்படுகின்றன. இவனை புகழ்ந்து பாடும் புலவர் இவனது நாட்டில் உள்ள யானையானது ஒரு கர்பத்தில் பத்து கன்றுகளை ஈனுமோ? என்று கேட்டு வியக்கிறார்.

**" விளங்கு மணிக் கொடும்பூ ணாஅய் நின்னாட்**
**டிளம்பிடி யொருசூல் பத்தீ னும்மோ" (புறம்.130:1-2)**

குடகடல் பக்கத்தே ஆய் கொங்கர்களை ஓட்டிய வீரச்செய்தியை புலவர் '**கொங்கர்க் குட கடல் ஓட்டிய ஞான்றை**'[4] குறிப்பிடுகிறார்

**5.1. அறப்பண்பு:**

புலவர் மோசியார் ஆய் வள்ளலின் ஈகைத் திறத்தினைப் பற்றி வினா எழுப்புகிறார். அப்போது ஆய் இப்பிறவியில் நன்மையோடு வாழ்வதோடு மட்டுமின்றி மறுமையிலும் நல்ல வாழ்வோடு இருக்க வேண்டும் என்பதற்காக அறம் செய்கிறான். என்கிறார் ஒருவர். அதனை மறுத்த மோசியார்,

**" இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்**
**அறவிலை வணிக னாயலன் பிறரும்**
**சான்றோர் சென்ற நெறியென**
**ஆங்குப் பட்டன் றவன்கை உண்மையே" (புறம்.134:1-4)**

இது செய்தால் இது கிடைக்கும் என்று எதிர் பார்த்து ஒன்றைச் செய்தால் அது வாணிகத்தைப் போல ஆகிவிடும். இம்மையிலே செய்வது மறுமைக்கு வந்து உதவும் என்று, தான் செய்யும் அறத்துக்குப் பயனை எதிர்நோக்கும் அறவிலை வாணிகன் அல்லன் ஆய். சான்றோர்கள் போன வழி இது என்ற ஒரே நினைவோடு இந்த வள்ளன்மையை மேற்கொண்டிருக்கிறான் என ஆய் வள்ளலின் அறப்பண்பினை போற்றிப் பாடியுள்ளார்.

**6.அதியமான்:**

இவ்வள்ளலின் பெயர்களாவன அதியன், அதிகன், அதியமான், எழினி என்றும் அழைக்கப்படுவான். தகடூர் என்னும் ஊரினைக் கொண்டு ஆட்சி செய்தவன். இந்த ஊர் தற்போது 'தர்மபுரி' என்றழைக்கப்படுகிறது. இவனுக்கு உரிய மலை 'குதிரை மலை' ஆகும். ஔவையாரிடத்து நட்பு பூண்டவன். நீண்ட நாள் வாழும் சக்தியை கொடுக்கும் ஓர் அரிய நெல்லியை தான் உண்ணாது அதன் அரிய பயனை எடுத்தும் முன் சொல்லாது தமிழை நன்றுயென வளர்க்கும் ஔவையாரிடத்து அரிய அக்கனியை உண்ணக் கொடுத்து சான்றாண்மையில் சிறந்தவனாக அதியன் விளங்கினான். இதனை,

**" ------------மால்வரைக்**
**கமழ் பூஞ்சாரல் கவினிய நெல்லி**
**அமிழ்து விளைதீம் கனி ஔவைக்கு ஈந்த**
**--------------------------**
**அரசக் கடல் தானை அதிகனும்" (சிறுபாண்.99-103)**

இப்பாடலடிகள் இயம்புகின்றன.

மழவர் என்னும் வீரர் குடிக்கு தலைவன் ஆவான். வீரம் நிறைந்தவன். தன்னிடம் பரிசில் பெற்றவர்கள் எத்துனைமுறை அவனிடத்து திரும்பி வந்து கொண்டே இருப்பினும் முகம் மாறாது

அன்போடும், மகிழ்வோடும் அவர்களை முதல்நாள் உபசரித்ததைப் போன்றே உபசரிப்பான். இதனை ஔவையார்,

**" ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்**
**பலநாள் பயின்று பலரொடு செல்லினும்**
**தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ" (புறம்.101:1-3)**

இப்பாடலில் சிறப்புடன் அதியனைப் பாராட்டுகிறார் யானை தனது கோட்டிடை வைத்த உணவு தப்பாதது போல பரிசில் பெறுங்காலை நீட்டிப்பினும், நீட்டிய தொழியினும் அப்பரிசில் நமக்கு உரியது அதியமான் தவறாது கொடுத்து விடுவான் என அவனின் கொடைத்தன்மையை குறிப்பிடுகிறார்.

**6.1. போர்மறம்:**

போரில் தன்னுடன் பகைத்தவரோடு போரிட்டு உடம்பில் பட்ட புண்களோடு தனக்கு மகன் பிறந்திருக்கிறான் என்ற செய்தியை அறிந்த அதியமான் நேரே போர்களத்திலிருந்து பார்க்க வந்தான். தன் மகனை பார்த்த பிறகும் அவன் பகைவர்கள் மீது கொண்ட சினம் குறையாமல் அவன் கண் சிவந்தே காணப்பட்டன அதனைக் கண்ட ஔவையார் அவன் சினம் மிகுதியால் அப்கைவர்களின என்ன ஆகியிருக்குமோ என்றெண்ணி பின்வருமாறு அவனின் வீரத்தினை பாடுகிறார்.

**" --------வயக் களிறு போல,**
**இன்னும் மாறாது சின்ன; அன்னோ!**
**உய்ந்தனர் அல்லர, இவன் உடற்றியோரே**
**செறுவர் நோக்கிய கண், தன்**
**சிறுவனை நோக்கியும், சிவப்பு ஆனாவே" (புறம்.100:7-11)**

**7.நள்ளி:**

வளமான கண்டீர நாட்டை ஆண்டவன் நள்ளி எனும் வள்ளல். வேட்டுவத் தலைவன் என்றழைக்கப் படுபவன். கண்டீர நாடானது தற்காலத்தில் 'தொட்டபெட்டா' என்றழைக்கப்படுகிறது. ஈரம் கண்டு கண்டாகக் கிடக்கும் மலை கண்டீர நாடு ஆகும். அதனால் இவ்வள்ளல் கண்டீர கோப்பெரு நள்ளி என அழைக்கப்படுகிறான். தன்னிடம் வந்தவர்கள் மீண்டும் வறுமையில் வாடாதவாறும், பிற இரவலர் இடத்து செல்லாதவாறும், போதும் போதும் என்றளவிற்கு பொருளை கொடையாக கொடுக்கும் தன்மையுடையவன் நள்ளி.

**" -----------கரவாது**
**நட்டோர் உவப்ப நடைப்பரிகாரம்**
**முட்டாது கொடுத்த முனை விளங்கு தடக்கை**
**-------------------------------**
**நளிமலை நாடன் நள்ளியும்" (சிறுபாண்.103-107)**

இவ்வள்ளலின் தன்மையை சிறுபாணாற்று அடிகள் சுட்டுகின்றன.

**7.1. ஈகைப்பண்பு:**

விருப்போடு தன்னை நினைந்து வருவாருடைய வறுமை மிகவும் நீங்கத் தவிராது கொடுக்கும் கூறுபாடமைந்த வண்மையினையுடைய பகைவரைத் துரத்திய நள்ளி வள்ளலின் கொடைத்திறத்தினையும், வீரத்தையும் ஒருங்கே இப்பாடலடிகள்,

**" தள்ளா தீயுந்தகைசால் வண்மைக்**

**கொள்ளா ரோட்டிய நள்ளி" (புறம்158:15-16)**

சுட்டுகின்றன்.

நள்ளி நல்ல அணிகலன்களோடு களிற்றினையும் பரசிலர்க்கு அளித் சிறப்பினை,

**" நாடொறு நன்கலங்களிற்றொடு கொணர்ந்து**

**கூடுவிளங்கு வியனகர்ப் பரிசின் மற்றளிப்பப்" (புறம்.148:3-4)**

வன்பரணர் புகழ்ந்து பாடுகிறார். அவனின் ஈகை தன்மையை அகப்பாடலும் பின்வருமாறு சுட்டுகிறது.

**" ----------இரப்போர்க்கு**
**இழைஅணி நெடுந்தேர் களிறொடு என்றும்**
**மழை சுரந் தன்ன ஈகை, வண்மகிழ்**
**கழல்தொடித் தடக்கை, கலிமான், நள்ளி" (அகம்.238:11-14)**

பயணத்தால் களைப்புற்று பசியால் வருந்திய புலவர் கூட்டத்தை கண்டளவில் வேட்டைக்கு வந்திருந்த நள்ளி தான் அவர்களிடத்து மன்னன் என சொல்லாது தான் வேட்டையாடிய மானின் நிணத்தைத சுட்டு கொடுத்து அவர்களின் பசியைப் போக்கினான். மேலும் அவர்களிடத்து தான் அணிந்து இருந்த முத்து வடங்களையும், ஆரத்தையும், கடகத்தினையும் தந்து தான் யாரென்றே சொல்லாது போகினன். அவனின் அத்தகைய சிறப்பினைகண்டு புலவர் அவனைப் போற்றுகிறார்.

**7.2. பெண்டிர் இயல்பு:**

நள்ளியின் நாட்டில் தன் மனை ஆடவர் தொலைவில் செல்லினும் மனை நோக்கி வரும் இரலர்க்கும் அம்மனைக் கிழத்தி தன் ஆற்றலுக்கு ஏற்ப ஒரு சிறு பிடி யானையாவது கொடுத்து அனுப்புவர். அந்நாட்டின் மக்களின் இயல்பே அவ்வாறு என்றால் அந்நாட்டுத் தலைவனின் கொடைபண்பைப் பற்றி கூறல் வேண்டாவன்றோ?

**" கிழவன் சேட்புலம் படரின் இழை அணிந்து**
**புன் தலை மடப் பிடி பரிசிலாக**
**பெண்டிரும் தம் பதம் கொடுக்கும் வண் புகழ்க்**
**கண்டீரக்கோன் ஆகலின்" (புறம்.151:3-6)**

இப்பாடல்வழி நள்ளியின் கொடைபண்பு மற்றும் அல்லாது அவன்நாட்டு மக்களின் ஈகைப் பண்பினையும் பாராட்டுகிறார்.

**8.ஓரி:**

கொல்லிக் கூற்றத்து தலைவன் ஓரி ஆவான். இவன் 'ஓரி' என்னும் பெயருடைய குதிரையை உடையவன். வில் வித்தையில் சிறந்தவன். புன்னை மரங்கள் நிறைந்த மலைகளை உடைய நாட்டினை பரிசிலர்க்கு வழங்கியவன் இதனை,

**" -------------நளிசினை**

**நறும்போது கஞுவிய நாகுமுதிர் நாகத்து**
**ஓரிக் குதிரை ஓரியும்" (சிறுபாண்.101-111)**

இப்பாடலடிகள் இம்மன்னனின் வள்ளல் தன்மையைச் சுட்டுகிறது.

**8.2. வில் வீரம் :**

ஓரி வள்ளல் வில்வித்தையில் சிறந்தவனாதலால் வல்வில்ஓரி என சிறப்பிக்கப்படுகிறான். இவன் விடுக்கும் அம்பானது, முதலில் யானையையும், அடுத்து புலியையும், அடுத்து புள்ளி மானையும். அடுத்து பன்றியையும்,அடுத்து தூரத்தில் உள்ள புற்றின்கண் உள்ள உடும்பின் மீது துளைத்து நிற்கும் தன்மையை உடைய வல்வில் வேட்டம் ஆகும். வல்வில் வேட்டம் என்பது மிக்க வன்மையுடையதும் பலவற்றை ஊடுருவிச் செல்லும்படி அம்பை விரைவிற் செலுத்துவதுமாகிய வில்வேட்டை ஆகும். இதனை,

**" வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி**
**----------------------------**
**வல்வில் வேட்டம் வலம்படுத் தருந்தோன்" (புறம்.152.1-6)**

இவ்வள்ளலின் வில் வீரத்தினை இவ்வடிகள் சுட்டுகின்றன.

இரப்போர்க்கு பூண்களையணிந்த யானையை கொடையாக கொடுப்பான் மேலும் பரிசிலர்க்கு,

**" பனிநீர் பூவா மணிமிடைகுவளை**
**வானார்த் தொடுத்த கண்ணியுங்கலனும்**
**யானை யினத்தொடு பெற்றனர்" (புறம்.153:7-9)**

நீரில் பூவாத மணியால் ஆன குவளைப் பூவினை வெள்ளி நாராற் தொடுக்கப்பட்ட பொன்னரி மாலையினையும், பிற அணிகலன்களையும் யானைகளோடு பரிசிலர்க்கு கொடுப்பவன் ஓரி வள்ளல் வீரத்திலும், கொடையிலும் சிறந்து விளங்கிய ஓரி வள்ளல் மலையமானுடன் நடந்தபோரில் தன் ஓரி எனும் குதிரையில் இருந்து சண்டையிட்டு காரியால் போரில் கொல்லப்பட்டான்.

**" முள்ளூர் மன்னன் கழல் தொடிக் காரி**
**செல்லா நல்இசை நிறுத்த வல்வில்**
**ஓரிக் கொன்று ---" (அகம்.209:12-15)**

அவன் இறப்பினும் அவனின் வீரமும், கொடையும் காலந்தோறும் மறவாது இன்றளவும் அவ்வள்ளளுக்கான விழா கொல்லிமலையில் நடந்து கொண்டிருப்பது சிறப்பானது ஆகும்.

**முடிவுரை:**

- வள்ளல்கள் தம்மை நாடிவரும் இரவலர்க்கு இல்லையென்னாது கொடுக்கும் தன்மையினை கொண்டவர்களாக பெருந்தன்மையோடு இருந்திருக்கிறார்கள்.
- வரையாது கொடுப்போன் என்ற பண்பிற்கு இலக்கணமாக திகழ்ந்துள்ளனர். மேலும் தன்னை நாடி வருவோரின் துயரினையும், வறுமையையும் குறிப்பறிந்து அவர்களின் வருத்தத்தை போக்குவதற்கு ஏற்ப பொருட்களையும் கொடையாக வழங்கியுள்ளார்கள்.
- இன்னார்க்குதான் கொடை கொடுக்கவேண்டும் என எண்ணாமல் உயிரக்கம் கொண்டு ஓரறிவு உயிரான முல்லைக் கொடிக்கும், ஐந்தறிவு உயிரான மயிலுக்கும் கூட அதன் வருத்தத்தை உடனே போக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டு கொடைமடம் கொண்டவர்களாக இருந்துள்ளனர்.

- வீரத்தில் சிறந்து எதிர்ப்பவர்களுக்கு அடல்ஏறு போன்று திகழ்ந்துள்ளனர். மூவேந்தர்களே தங்கள் படைக்கு துணையாக கேட்கும் அளவிற்கு வீரம் மிகுந்தவர்களாகவும், தான் அடையாளம் கூறாமல் வறியோரின் துன்பத்தை மட்டும் போக்கி செல்லும் வள்ளலின் பெருந்தன்மையினையும், புலவரிடத்து நட்பு பூண்டு தான் உண்டால் நீண்ட ஆயுள் கிடைக்கும் என்று அறிந்தும் அரிய நெல்லிக்கனியை தான் உண்ணாது புலவர்க்கு கொடுத்த வள்ளலின் திறம் போற்றத்தக்கது.
- சிறுநிலப்பரப்பை கொண்டவர்களாக வள்ளல்கள் இருப்பினும் வேந்தர்களைக் காட்டிலும் கொடைத்தன்மையில் பெருமனம் கொண்டவர்களாக இருக்கும் தன்மையே அவர்களை வள்ளல்கள் என்று புகழ்வதற்கு காரணமாவதை நாம் இதன் மூலம் அறியமுடிகிறது.

**மேற்கோள் விளக்கம்:**

1.தமிழ் இலக்கிய வரலாறு பக்கம்.27

2.தேவாரம்7-ம் திருமுறை பக்கம்.82

3.புறநானூறு பாடல்.110

4.புறநானூறு பாடல்.130

**துணைநூற்பட்டியல்:**

1. நச்சினார்க்கினியர் உரை, பத்துப்பாட்டு, உ.வே சாமிநாதையர் (குறிப்புரை), டாக்டர்.உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, பதிப்பு-2017.
2. சாமிநாதையர்.உ.வே, புறநானூறு மூலமும் பழைய உரையும், டாக்டர்.உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, பதிப்பு-2014.

3.செயபால். இரா,(உரை), அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 600 098, பதிப்பு-2007.

4.சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் 7-ம் திருமுறை, கி.வா.ஜகந்நாதன் (குறிப்புரை), திருப்னந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு-1949.

5. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாதெமி வெளியீடு, புது தில்லி-1972.